**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C.C 412/2022**

**LW1 PW1**

| Name | சாந்தா | | |
|---|---|---|---|
| Fathers Name | செல்வராஜ் | Calling | |
| Village | ஆவராணி | Religion | |
| Taluk | | Age | 65 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**07-02-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவராணியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் என் வீட்டில் அருகில் இருக்கும் விஜயகுமாரின் வீட்டை ஆஜர் எதிரிகள் எரித்து விட்டார்கள். இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து மாலினி, லலிதா, சங்கர் என்பவர்களுடன் திரும்ப வந்தபொழுது நாங்கள் இங்கு வரக்கூடாது என்று தேவுடியா மகளே குச்சிக்காரி மகளே என்று ஆபாச வார்த்தைகளால் ஆஜர் எதிரிகள் திட்டினார்கள். நான் எஸ்,பியிடம் புகார் கொடுத்து விட்டோம் . ஏன் இங்கு வரக்கூடாது என்று கூறுகிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரிகள் அனைவரும் கல்லாலும் கட்டையாலும் அரிவாளாலும் எங்களை அடித்தார்கள். ஆஜர் எதிரிகள்எங்களை விரட்டி விரட்டி அடித்தார்கள். என் தலைமுடியை பிடித்து இழுத்து சென்று அடித்தார்கள். உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். என் இடது கன்னத்திலும், இடது தோள் பட்டையிலும் ஆஜர்

எதிரிகள் அடித்தார்கள். அதில் என்னால் இடது கையால் வேலை செய்ய முடியவில்லை. உடனே அருகில் இருப்பவர்கள் என்னை நாகப்பட்டினம் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் மருததுவமனையில் இருக்கும்பொழுது போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை கூறினேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் இருக்கும் கையொப்பபம் நான் கொடுத்தது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது-

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C.C 412/2022**

LW2 PW2

| | | | |
|---|---|---|---|
| Name | ஜெயமாலினி | | |
| Husband Name | விஜயகுமார் | Calling | |
| Village | ஆவராணி | Religion | |
| Taluk | | Age | 29 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**07-02-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவராணியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா. 1 ஐ தெரியும். என் வீட்டை என் கணவனின் ஊர்க்காரர்கள் கொளுத்தி விட்டார்கள். அது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுப்பதற்காக சென்றிருந்தேன். அப்போது அங்கு தகராறு ஏற்பட்டது. அ தனால் நீங்கள் ஊருக்கு செல்லுங்கள் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூறினார்கள். அதனால் நான் ஊருக்கு வந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் கட்டையாலும் கம்பாலும் என்னையும், சாந்தாவையும் ஜெயா என்பவரையும் அடித்தார்கள். ஊருக்கு எதுக்கு வருகிறீர்கள் என்று விரட்டி விரட்டி அடித்தார்கள். அதில எனக்கு நெஞ்சு கன்னம், மற்றும் கையில் காயம் ஏற்பட்டது. அதனால் என் கையை தூக்க முடியாத நிலைமையில் இருந்தேன். ஆஜர் எதிரிகள் என் முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். அதில்

நாங்கள் மயங்கி விழுந்து விட்டோம். உடனே அருகில் இருப்பவர்கள் என்னை நாகப்பட்டினம் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C.C 412/2022**

LW4 PW3

| | | | |
|---|---|---|---|
| Name | லலிதா | | |
| Husband Name | சங்கர் | Calling | |
| Village | ஆவராணி | Religion | |
| Taluk | | Age | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**07-02-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவராணியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா. 1 மற்றும் அ.சா. 2 ஐ தெரியும். அவர்களும் எங்களுடன் சண்டையில் காயம்பட்டவர்கள். கடந்த 28.05.2019 அன்று எங்கள் வீட்டை ஆஜர் எதிரிகள் கொளுத்தி விட்டார்கள். அது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் சென்றோம். நீங்கள் ஊருக்கு செல்லுங்கள் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூறினார்கள். அதனால் நான் ஊருக்கு வந்தோம்.. அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் கட்டையாலும் கம்பாலும் என்னையும், சாந்தாவையும் ஜெயா மற்றும் ஜெயமாலினி என்பவர்களை அடித்தார்கள். நாங்கள் தப்பித்து செல்லலாம் என்று முயற்சி செய்தபோது ஆஜர் எதிரிகள் எங்களை துரத்தி அடித்தார்கள். நாங்கள் மறுபடியும் ஊருக்குள் வந்தால் கொலை செய்து விடுவோம் என்று ஆஜர் எதிரிகள் மிரட்டினார்கள். எங்கள்

பிள்ளைகளின் படிப்பு வீணாகி விட்டது. ஆஜர் எதிரிகள் அடித்ததில் எனக்கு நெஞ்சு கழுத்து மற்றும் இடுப்பில் காயம் ஏற்பட்டது. உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும் என் கணவரும் சாந்தா, ஜெயமாலினி, ஜெயா ஆகியோர்களை நாகப்பட்டினம் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C.C 412/2022**

LW5 PW4

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கர் | | |
| Father's Name | செல்வராஜ் | Calling | |
| Village | ஆவராணி | Religion | |
| Taluk | | Age | 34 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**07-02-2025**

**All accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆவராணியில் வசித்து பாடகராக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா. 1 என்னுடைய அம்மா ஆவார். அ.சா. 3 என்னுடைய மனைவி ஆவார். அ.சா. 2 என் ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 28.05.2019 அன்று ஜெயமாலினியின் வீட்டை ஆஜர் எதிரிகள் கொளுத்தி விட்டார்கள். அது தொடர்பாக நாங்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுக்க சென்றோம். நீங்கள் ஊருக்கு செல்லுங்கள் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூறினார்கள். நாஙங்கள் கூறுவதைத்தான் நீங்கள் கேட்க வேண்டும் எவ்வாறு எஸ்பி யிடம் புகார் கொடுத்தீர்கள் என்று கேட் டு ஆஜர் எதிரிகள் அனைவரும் கட்டையாலும் கம்பாலும் கல்லாலும் சாந்தா ஜெயமாலினி, ஜெயா, லலிதா என்பவர்களை அடித்தார்கள். அதை தடுக்க சென்ற என்னையும் அடித்தார்கள். ஒரு கிமீ தூரம் வரை துரத்தி அடித்தார்கள். அடித்ததில்

என் அம்மாவுக்கு தலையில் மற்றும வயிற்றில் காயம் ஏற்பட்டது. ஜெயமாலினிக்கு இடுப்பில் காயம் ஏற்பட்டது. ஜெயா என்பவருக்கு நெஞ்சில் காயம் ஏற்பட்டது. எனக்கு விலா எலும்பில் காயம் ஏற்பட்டது. என்னை சம்பத், மற்றும் மணிகண்டன் கட்டையால் அடித்தார்கள். நாங்கள் மறுபடியும் ஊருக்குள் வந்தால் கொலை செய்து விடுவோம் என்று ஆஜர் எதிரிகள் மிரட்டினார்கள். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் நான் அனைவரையும் நாகப்பட்டினம் அரசு மருததுவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தேன். மீண்டும் நாங்கள் ஊருக்குள் செல்ல முயற்சி செய்த போது ஆஜர் எதிரிகள் என் அம்மாவை தாக்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போதிய வாய்ப்பளித்தும் கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை